# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

### சாதாரணக் கூட்டப்பொருள்

2011ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம்தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| **25.02.2011 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்டப் பொருள்** | | |
| 30.05.11 | 1. தூத்துக்குடி மாநகராட்சி சர்வே வார்டு 2, பிளாக் எண். 15, நகரளவு எண் 1376/2ஏ, பாளையங்கோட்டை ரோட்டில் திரு. மந்திர மூர்த்தி மற்றும் 14 நபர்களின் வணிக கட்டிட ஆக்கிரமிப்பை வரன்முறை செய்து பட்டா வழங்க கோரியுள்ள மனுவில் மேற்படி இடத்திற்கு மார்க்கெட் மதிப்பு இரு மடங்கு கட்டணத்தை அரசுக்கு செலுத்த சம்மதம் தெரிவித்தும் நெடுங்கால தங்களது அனுபவத்தை வரன்முறை செய்து கொடுக்க கோரியதின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.டி1/71225/1995 நாள் 20.12.2010ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட இடத்திலுள்ள ஆக்கிரமிப்பை வரன்முறை செய்து பட்டா வழங்குவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுவது குறித்து நடவடிக்கை எடுத்து அறிக்கை அனுப்பி வைக்க கேட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>மாநகராட்சி பகுதிகளிலுள்ள அரசுபுறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பை வரன்முறை செய்வது தொடர்பான அரசாணைகள், விதிமுறைகள் மற்றும் தெளிவுரைகளுக்கு உட்பட்டும், மனுதாரர்கள் இடம் அனுபவம் தாவா தொடர்பான நீதிமன்ற தீர்ப்புகளுக்கு உட்பட்டும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரியினங்களில் நிலுவையின்றி செலுத்திய பிறகு நகரளவு வார்டு 2 பிளாக் எண். 15 நகரளவு எண். 1376/2 எ இடம் நகரளவு ஆவணங்களின்படி ஜி.ஆர். நத்தம் என உள்ள இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள வணிக கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக வருவாய்த்துறையினரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபணையில்லை என்ற விபரத்தினை மாவட்டஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரிவிக்கலாமா என்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>எப்1/1201/2011 | 319) அலுவலகக் குறிப்புப்படி வருவாய்த்துறையினரால் மேற்க்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு ஆட்சேபணையில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2 இம்மாநகராட்சி பொது பிரிவில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 31–01–11ல் ஓய்வு பெற்ற திரு. டேவிட்ரஸ்கின்ராஜ் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 11914/– மான்யம் ரூ. 10000/– மொத்தம் ரூபாய் ரூ. 24874/–ஐ (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து எண்ணூற்றி எழுபத்தி நான்கு மட்டும்) பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br><br>சி4 1315/2011 | 320) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. இம்மாநகராட்சி கிருஷ்ணராஜபுரம் 9வது தெருவில் சர்வே வார்டு எ. பிளாக் 7 நகரளவு எண் 66ல் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த கோரி புனித தாமஸ் கல்வியியல் கல்லூரி நிர்வாகத்திற்கு மாநகராட்சி சார்பாக 4–2–2011ம் தேதியிட்ட இறுதி அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது. மேற்படி அறிவிப்பினை எதிர்த்து சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து மேற்படி புனித தாமஸ் கல்வியியல் கல்லூரி நிர்வாகியால் W.P.(M.D.)NO. 1964/2011ல் வழக்கு தொடரப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.<br><br>எப்1/2896/11 | 321) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4. இம்மாநகராட்சி கிருஷ்ணராஜபுரம் 9வது தெருவில் சர்வே வார்டு எ. பிளாக் எண். 7 நகரளவு எண். 74 மற்றும் பழைய சர்வே நம்பர் 53 PART 60 அடி சாலை மாநகராட்சி சாலையாகும். மேற்படி சாலையில் திருமதி எ. கலைமணி பாண்டியன், க/பெ. K.S.A. பாண்டியன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதனை அப்புறப்படுத்தக்கோரி மாநகராட்சி சார்பாக ஆக்கிரமிப்பு அறிவிப்பு திருமதி. பி. கலைமணிபாண்டியன் என்பவருக்கு சார்வு செய்யப்பட்டது. அதனை எதிர்த்து மாநகராட்சி ஆணையர் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(M.D.) NO/ 1910/11ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.<br><br>எப்1/2897/11 | 322) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சி பகுதியில் கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் 2010ம் மாதங்களில் கடுமையான மழையின் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நகரின் அநேக பகுதிகள் வெள்ளம் சூழ்ந்தது. குறிப்பாக அண்ணாநகர், டூவிபுரம், பிரையண்ட் நகர் மற்றும் சிதம்பர நகர் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டது.<br><br>எனவே அண்ணா நகர், டூவிபுரம், பிரையண்ட் நகர் மற்றும் சிதம்பர நகர் பகுதிகளில் திறந்தவெளி வடிகால் கட்டப்பட்டால் மழை காலங்களில் வெள்ள நீர் வடிவதற்கு வசதியாக அமையும். எனவே இப்பகுதிகளை திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு ஆய்வு செய்து வடிகால் | 323) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கட்டுவதற்கான தொழில்நுட்ப கருத்துக்கள் மற்றும் வரை படங்கள் பெறப்பட வேண்டும்.<br><br>தொழில்நுட்ப வல்லுநர்கள் மேற்கண்ட இடங்களை பார்வையிட்டு தொழில்நுட்ப கருத்து மற்றும் மாடல் வரைபடங்கள் வழங்க கட்டணமாக ரூ 30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) வழங்க கேட்டு உள்ளார்கள். தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** 1) அனுமதிக்கலாம்<br><br>2)அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/3288/2011 | |
| | 6. இம்மாநகராட்சி மீது கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க கேட்டு திருமதி. சுமதி என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். W.P. 494/20211ற்கு மாநகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞர் திரு. கே. கடற்கரை அவர்கள் ஆஜராகவும் வழக்கிற்குரிய செலவு தொகையை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ2/13440/09 | 324) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7. இம்மாநகராட்சிக்கு 13வது நிதிக்குழு நிதி திட்டத்தின் (2010–11 முதல் 2014–15 வரை) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 82,66,959/– (ரூபாய் எண்பத்தி இரண்டு லட்சத்து அறுபத்தாறாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொன்பது மட்டும்) முதல் தவணையாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண். 306 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09–12–2010ல் கீழ்க்கண்ட முன்னுரிமை அடிப்படையில் நிதியினை செலவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>1. உள்ளாட்சி அமைப்பினால் பாதாள சாக்கடை திட்டத்திற்கு TWAD போர்டுக்கு பங்குத் தொகையினை செலுத்துதல்<br>2. உள்ளாட்சி அமைப்புக்கான மின்சார கட்டணம்<br>3. உள்ளாட்சி அமைப்பினால் TWAD போர்டுக்கு செலுத்தப்படவேண்டிய குடிநீர் கட்டணம்<br>4. தனியர் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு<br><br>இம்மாநகராட்சியின் பங்கு தொகையாக பாதாள சாக்கடை திட்டத்திற்கு நிதி எதுவும் செலுத்தப்படவேண்டியதில்லை. எனவே 13வது நிதிக்குழு மான்ய நிதித் தொகையில் மீதம் உள்ள 50 சதவிகிதம் தொகை ரூ. 82,66,959/– ஐ (ரூபாய் எண்பத்தி இரண்டு லட்சத்தி அறுபத்தாறாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்தொன்பது மட்டும்) அரசாணை வழிகாட்டிதல்படி மாநகராட்சி மின்கட்டணத்திற்கு செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** 1 அனுமதிக்கலாம்.<br><br>2. அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர் நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/16846/2010 | 325) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 8. இம்மாநகராட்சி பணியாளர் திரு எல். கிருஷ்ணமூர்த்தி பம்பு துலக்குநர் (WS) என்பவர் தனது மகளின் திருமணத்திற்காக திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br><br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் எதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழஙகினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் திருமணக்கடன் வழஙக அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.5280/11/பி4 | 326) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி கிருஷ்ணராஜபுரம் 9வது தெருவில் சர்வே வார்டு 7 நகரளவு எண் 66ல் உள்ள ஆக்கிரமிப்புகளை மாநகராட்சியால் அப்புறப்படுத்த ஆட்சேபணை செய்து புனிததாமஸ் கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தினர் தூத்துக்குடி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து ஓ.எஸ். எண். 188/11ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும் அதற்குரிய செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அவசரம் அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்1. 4795/11 | 327) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. தூத்துக்குடி மாநகராட்சி கிருஷ்ணராஜபுரம் 9வது தெருவில் சர்வே வார்டு எ. பிளாக் எண்.7 நகரளவு எண் 74 மற்றும் பழைய சர்வே எண். 53 பகுதியில் உள்ள 60 அடி மாநகராட்சி சாலையில் திரு K.S.A. பாண்டியன் மற்றும் அவரது மனைவி திருமதி எ. கலைமணிபாண்டியன் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை மாநகராட்சியால் அப்புறப்படுத்த ஆட்சேபனை செய்து தூத்துக்குடி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து ஓ.எஸ். எண். 176/2011ல் வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>மேற்கண்ட வழக்கில் மாநகராட்சி சார்பாக மாமன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும் அதற்குரிய செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்1/4592/11 | 328) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11. இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக தற்பொழுது உள்ள பருவநிலை மாற்றத்தை முன்னிட்டும் கொசுக்களால் பரவும் நோய்களை தடுக்கும் பொருட்டும் ஏப்ரல் முதல் ஜுலை வரையிலான காலங்களுக்கு கொசுக்களை கட்டுப்படுத்தும் வேதி புகை மருந்து தெளிக்க தேவைப்படும் பெடரோல் மற்றும் டீசல் ஆகியவற்றை முறையே 250லிட்டர் மற்றும் 2000லிட்டர் அவசர அவசியம் கருதி வாங்க மாமன்ற முன் அனுமதியும் அதற்கான தோராயமான செலவு தொகை ரூ 1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 329) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு –** 1,அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எச்4/10463/09 | |
| | 12. தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள 33 வாகனங்களுக்கு 2011–2012ம் ஆண்டிற்கு (1–4–2011 முதல் 31–3–2012 வரை) வாகனவரி, பசுமை வரி, பாதுகாப்பு வரி, சர்வீஸ் கட்டணம் புகைச் சான்று கட்டணம், மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் பதிவு சான்று கட்டணம் மற்றும் காப்பீட்டு சான்று புதுப்பித்தல் கட்டணம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு செலுத்தவும் அதுவகைக்கு ஆகும் உத்தேச செலவு ரூ 5,00,000 (ரூபாய் ஐந்து லட்சம்) க்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –**மாமன்றம் அனுமதி வழங்கலாம். அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி செலுத்தியதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>இ6/3223/2011 | 330) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நகர சுகாதார செவிலியர்கள் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு 2011ம் வருடத்திற்கு சீருடைப்படி வழங்குவதற்கு அரசாணை எண். 236 நாள் 01.06.2009ன் படி வழங்குவதற்கு தலா ரூ. 750/– வீதம் பத்தொன்பது நகர சுகாதார செவிலியர்கள் மூன்று மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர்களுக்கு தொகையாக ரூ 16500/–ம் மற்றும் மூன்று பகுதி சுகாதார செவிலியர்க்ளுக்கு சீருடைப்படியாக தலா ரூ 1200/– வீதம் வழங்க தொகையாக ரூ 3600/–ம் மொத்தமாக ரூ 20100/– தேவைப்படுகிறது. மேற்படி தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>எச்4/507/2011 | 331) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 14. தூத்துக்குடி மாநகராட்சி மீனாட்சிபுரம் சர்வே வார்டு 4 பிளாக் 29 மற்றும் 29எ. நகரளவு எண். 3905/pt **3464/1** அரவிந்த்கண் மருத்துவமனை கட்டிடம் கட்ட திட்ட அனுமதி பெறுவதற்கு அரசாணை எண். **130** (வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி) நாள் **14–6–2010**ன் படி பொது ஒதுக்கீடு (Open space Reservation) மனையின் மொத்த பரப்பில் **10**சதவிகிதம் நிலத்தினை தூத்துக்குடி மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைப்பு செய்ய அனுமதி கோரி வரப்பெற்றுள்ள தலைவர் கோவல் டிரஸ்ட் மதுரை என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடம் மீனாட்சிபுரம் சர்வே வார்டு **4** பிளாக் **29**A நகரளவு எண் **3464/1**ல் **412.36** ச,மீ. பரப்பளவு (**10**%) இடத்தினை தானபத்திரம் மூலமாக பதிவு செய்து பெற்றுக் கொள்வது தொடர்பாக அவசர அவசியம் கருதி மாமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>எப்**3/18319/10** | 332) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 15. தூத்துக்குடி மாநகராட்சி சர்வே வார்டு 2, பிளாக் 37, நகரளவு எண் 3980/1 பகுதி முதல் 12 வரை 14, 3983/2ஏ மற்றும் 3984/2 கதவு எண் 41பி, 1பி, 1பி11 கட்டிடங்களை இடித்து விட்டு திருமண மண்டபம் கட்டுவது தொடர்பாக திருமதி. முத்துலெட்சுமி, திருமதி. தனலெட்சுமி மற்றும் திரு. ரமேஷ் ஆகியோர் விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம் ந.க.எண் 17349/09 பிஏ1 நாள் 09.03.2011ல் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்க இசைவு | 333) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டுள்ளதெனவும் சிறப்பு நிபந்தனையாக பி பாகம் 1 விரிவு அபிவிருத்தித் திட்டம் D5D5 40’ அகல திட்டச்சாலைக்கு மாநகராட்சியில் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. மனுதாரர்கள் D5D5 திட்டச்சாலைக்கான 40.00 மீட்டர் x 12.20மீட்டர் அளவில் 488 சதுர மீட்டர் இடத்தினை தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய உறுப்பினர் செயலர் உள்ளூர் திட்டக் குழுமம் தூத்துக்குடி அவர்களால் வரப்பெற்றுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு –</u>**<br>மாநகராட்சிக்கு அபிவிருத்தி திட்டம் D5D5 திட்டசாலை 40.00 மீட்டர் x 12.20மீ. அளவில் 488 ச.மீட்டர் ஒப்படைப்பு செய்யும் இடம், விரிவு அபிவிருத்தி திட்டம் ‘பி’ பாகம் 1 சர்வே வார்டு 2, பிளாக் 37, நகரளவு எண் 3980/15 பாகம் சிவந்தாகுளம் ரோடு இடத்தினை தானபத்திரம் மூலமாக பதிவு செய்து பெற்றுக் கொள்வது தொடர்பாக, அவசர அவசியத்தை கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>8469/2009/எப்4 | |
| | 16. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதாரப் பணிகளுக்குத் தேவையான தளவாடச் சாமான்கள் போதிய அளவில் இல்லாததால் பொது சுகாதாரப் பணிகள் செம்மையாக செய்து முடிக்க இயலவில்லை. எனவே பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான தளவாடச் சாமான்கள் அவசரம் அவசியம் கருதி புதிதாக வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ 600000/—க்கு (ஆறு லட்சங்கள்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>எச்.1/6766/2011 | 334) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 17. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வார்டுகளில் உள்ள தெருக்கள் வாரியாக தினசரி சேரும் குப்பைகளை எளிதில் சேகரித்து எடுத்துச் செல்ல ஏதுவாக மூன்று சக்கர சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.<br><br>அவ்வாறு பயன்படுத்தப்பட்டு வரும் மூன்று சக்கர சைக்கிள் நீண்ட காலமானதால் பழுதடைந்து பய்னபடுத்த முடியாத நிலையில் உள்ளதால் தெருக்களில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு குறைவாக உள்ளதோடு மட்டுமின்றி மிகவும் சிரமமாகவும் உள்ளது.<br><br>எனவே அவசரம் அவசியம் கருதி பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள மூன்று சக்கர சைக்கிள்களுக்கு பதிலாக புதிதாக 30 எண்ணம் மூன்று சக்கர சைக்கிள்கள் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 1000000/—க்கு (பத்து லட்சங்கள்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>எச்1/6765/2011 | 335) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 18. இம்மாநகராட்சிப் பகுதியில் தொற்று நோய் கிருமிகள் பரவா வண்ணம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பு செய்திட தேவையான சுண்ணாம்புத்தூள் மற்றும் கிருமிநாசினிகள் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ 400000/—க்கு (நான்கு லட்சங்கள்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம்.<br>எச்1.6764/2011 | 336) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 19. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சிதம்பரநகர் மெயின் சாலை மற்றும் வி.வி.டி. மெயின் சாலை சீரமைக்கும் பணிக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை 01.12.2010ம் தேதியன்று தினமணி நாளிதழில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத் தொகை ரூ.5663/–க்கு 01.12.2010ம் தேதிய RAF 27039ம் எண் விளம்பர பில்லினை, மேற்படி நாளிதழின் உரிமையாளர் ஆன மெசர்ஸ் எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) லிமிடெட், மதுரை நிறுவனத்தார் இவ்வலுவலகத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மெசர்ஸ் எக்ஸ்பிரஸ் பப்ளிகேசன்ஸ் (மதுரை) லிமிடெட் நிறுவனத்தாருக்கு விளம்பர கட்டணத் தொகை ரூ.5663/– வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ம.ப. எண். 184/2010–2011 | 337) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 20. இம்மாநகராட்சி பிறப்பு, இறப்பு பிரிவு மற்றும் அலுவலக வசூல் மையங்களில் உள்ள 5KVA ON LINE மற்றும் 2KVA ONLINE அகிய UPS கருவிகளின் உத்திரவாத காலம் முடிவடைந்துவிட்டதால், வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்வதற்கு கீழ்க்கண்ட விபரப்படி மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>**வரிசை எண். — நிறுவனத்தின் பெயர் — விலைப்புள்ளி தொகை**<br><br>**1)** மெசர்ஸ் HYKON INDIA (P)Ltd. கோயம்புத்தூர் **11** — ரூ. **19303/–**<br>**2)** மெசர்ஸ் Unique system திருச்சிராப்பள்ளி . **18** — ரூ.**21730/–**<br>**3)** மெசர்ஸ் SRI ANNAI ELECTRICALS contrds கோயம்புத்தூர் **– 10** — ரூ.**23163/–**<br><br>மேற்படி மூன்று நிறுவனத்தினரின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் HYKON INDIA (P) Ltd நிறுவனத்தினர் தொகை ரூ **19303/–**க்கு கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.<br><br>எனவே மேற்படி மெசர்ஸ் HYKON INDIA (P) LTD. நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**இ5/12978/10** | 338) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 21. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள சாலைகளில் சேகரம் ஆகும் மணலினை அகற்றும் பொருட்டு மணல் அள்ளும் வாகனம் வாங்கும் வகைக்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை **24–2–2011**ம் தேதியன்று "முரசொலி" நாளிதழில் வெளியிடப்பட்டும், **23–2–2011**ம் தேதியன்று "தமிழ்ச் சுடர்" நாளிதழில் வெளியிடப்பட்டும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்டவாறு முரசொலி நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பர கட்டணத்தொகை ரூ **8112/–**ஐயும், "தமிழ்ச்சுடர்" நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத்தொகை ரூ 10464/–ஐயும் மற்றும் வரிகளும் சேர்த்து வரும் மொத்த தொகை ரூ. 18863/–க்கு 24–2–2011ம் தேதிய PB/002052/10-11 ம் எண் | 339) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | விளம்பரப் பில்லினை மேற்படி பத்திரிக்கைகளின் உரிமையாளர் ஆன மெசர்ஸ் என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் (பி) லிமிடெட் சென்னை நிறுவனத்தார் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மெசர்ஸ் என்த்ரால் கம்யூனிகேசன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத்தொகை ரூ 18863/—ஐ வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/1483/2011 | |
| | 22. இம்மாநகராட்சி கணிணி பிரிவில் உள்ள HPLJ 1160 மற்றும் HPLJ 1120 ஆகிய பிரிண்டர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் அவற்றை பழுது பார்த்து சரி செய்வதற்கு கீழ்க்கண்ட விபரப்படி மூன்று நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.<br><br>**வரிசை எண். நிறுவனத்தின் பெயர் விலைப்புள்ளி தொகை**<br><br>1) Messrs.SARAN COMPUTERS THOOTHUKUDI – 8 Rs. 4000/-<br>2) Messrs.NEW CARE PRINTERS SOLUTIONS, THOOTHUKUDI- 8 Rs. 4300/-<br>3) Messrs. PRINT TECH SOLUTIONS, THOOTHUKUDI Rs. 4500/-<br><br>மேற்படி மூன்று நிறுவனத்தினரின் விலைப்புள்ளிகளில் மெசர்ஸ் SARAN COMPUTERS நிறுவனத்தினர் தொகை ரூ. **4000/—**க்கு கொடுத்துள்ள விலைப்புள்ளியானது மற்ற இரண்டு நிறுவனத்தினர்களின் விலைப்புள்ளிகளை விட மிகவும் குறைவாக உள்ளது.<br><br>எனவே மேற்படி மெசர்ஸ் Saran Computers நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/4863/2011 | 340) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 23. தூத்துக்குடி ரோச் பூங்கா அருகில் மன்னார் வளைகுடா கடலில் படகுதுறை அமைப்பதற்கு அரசாணை (நிலை) எண் 162, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை நாள் 10—9—2008ன் அடிப்படையில் ரூ 17.50 இலட்சம் மதிப்பீட்டில் அரசின் அனுமதி பெறப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ஆணை எண்.வ7/46130/2008 நாள் 29—10—2008ன் படி மேற்படி மதிப்பீட்டுத் தொகை ரூ 17—50 இலட்சம் மதிப்பீட்டில் (சுற்றுலா துறை பங்கு ரூ 7.00 லட்சம், சிறுசேமிப்பு ஊக்க நிதி ரூ 7.00 லட்சம், தூத்துக்குடி மாநகராட்சி பொது நிதி ரூ 3.50 லட்சம்) பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. 23—12—2008ல் ரூ 7.00 லட்சம் தொகையினை இம்மாநகராட்சிக்கு விடுவித்து உத்திரவும் வழங்கப்பட்டது.<br><br>சுற்றுப்புற சூழல் சம்பந்தமாக தடையில்லா சான்றிதழ் வழங்க கேட்டு பிரேரணையினை உதவி இயக்குநர் நகர் மற்றும் ஊரமைத்துறை திருநெல்வேலி அவர்கள் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 46வது மாவட்ட கடற்கரை மண்டல மேலாண்மை குழுக்கூட்டத்தில் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி பிரேரணையானது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரையின் பேரில் சுற்றுச்சூழல் துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. | 341) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு மாநில கடற்கரை மண்டல மேற்பார்வை குழுவின் 30–12–2010ல் நடைபெற்ற 62வது பரிசீலனைக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி திட்டப் பிரேரணையினை பரிசீலனை செய்து ரோச்பூங்காவில் படகுதுறை அமைய உள்ள இடம் மன்னார் வளைகுடாவில் உயிரினங்களின் ஜீவாதார மண்டலத்தில் உள்ளதாலும் 200 மீட்டர் தொலைவில் மாங்குரோவ் காடுகள் உள்ளதாலும் , சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புப் பிரச்சினைகளையும் உயிரினங்களின் ஜீவாதார மண்டல பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு மேற்படி திட்டப் பிரேரணையினை நிராகரிப்பதற்கு முடிவு செய்து மேற்படி குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.<br><br>எனவே தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். வ7/46130/2008– I நாள் **16–3–2011**ல் ரோச் பூங்காவில் படகு துறை அமைப்பதற்கு **29–10–2008**ம் தேதிய செயல்முறைகள் உத்திரவு மூலம் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்வதாகவும் மாற்றுப் பணி எதுவும் அரசின் அனுமதி பெறாமல் செய்ய இயலாத காரணத்தால், முன்பு இம்மாநகராட்சிக்கு வழஙகப்பட்ட ரூ 7.00 லட்சம் தொகையை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>எனவே படகுதுறை அமைப்பதற்கு வழங்கப்பட்ட ரூ **7.00** லட்சம் தொகையை திரும்பவும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் திரும்ப ஒப்படைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதி வழங்கலாம். தற்போது அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ளநடைபாதை ரோச் பார்க் பகுதியின் ஒரு பகுதி வழியாகவும் நடைபாதையாகவும் உபயோகிக்கலாம். அதற்குரிய செலவுத் தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகலாம்.<br><br>இ5/14753/2007 | |
| | 24. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் நீர்வரத்து மிகவும் குறைந்து நகருக்கு வரும் நீரின் அளவு மிகவும் குறைந்துவிட்டது. எனவே தாமிரபரணி ஆற்றில் புதியதாக இரண்டு நீர் உறுஞ்சி கிணறு (INFILTERATION WELL) மற்றும் அதற்கு தேவையான C.I. பம்பிங மெயின், மின் மோட்டார் மின்சார கேபிள் ஆகியவை வைத்து அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூபாய் ரூ **4000000/–** க்கு (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் குடிநீர் திட்டத்தின் வைப்பு நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br><br>ம.ப.எண். 13/2011–2012 | 342) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 25. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சண்முகபுரம் மாநகராட்சி பள்ளியின் முதல் தளத்தில் புதியதாக நூலக கட்டிடம் அமைப்பதற்கும் அதற்கு தேவையான மேஜை நாற்காலிகள் வாங்கவும் மற்றும் கணிணிகள் வாங்கி பொருத்தி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 1800000/– க்கு (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) இம்மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** –<br>அனுமதிக்கலாம் மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br><br>ம.ப.எண்.12/2011–12. | 343) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 26. இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியில் உள்ள குடிநீர் பணியாளர்கள் குடியிருப்பு மிகவும் சேதமடைந்த நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் இருப்பதால் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு குடியிருப்பு (Block) மற்றும் வல்லநாடு தெப்பம் பகுதியில் ஒரு குடியிருப்பு (Block) கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ **1560000/–**க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் குடிநீர் விநியோக டேவணித்தொகை நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br><br>ம.ப.எண்.**15/2011–2012** | 344) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 27. இம்மாநகராட்சி பகுதியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள பூபாலராயர்புரம் பாலம் முதல் திரேஸ்புரம் பாலம் வரையிலானபக்கிள் ஓடையின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளது. மேற்படி தடுப்புச் சுவரின் தென்புறம் உள்ள காலி இடத்தினை மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் தடுக்கவும் நகரின் தென்புறம் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும் மேற்படி பகுதியில் அணுகுசாலை அமைத்திடவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ **28.00** இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண்.**09/2011–2012** | 345) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 28. இம்மாநகராட்சி பகுதியில் தற்பொழுது பக்கிள் ஓடையில் தடுப்பு சுவர் கட்டப்பட்டு முதல் கட்டமாக பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்தடுப்பு சுவரின் தென்பகுதியில் உள்ள இடத்தில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் தடுக்கவும், நகரின் கீழ் பகுதியில் தங்கு தடையின்றி சாலை போக்குவரத்து சீரான முறையில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பூபாலராயர்புரம் பாலம் முதல் எஸ்.எஸ்.தெரு பாலம் வரையில் சாலை அமைத்திட தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ **39.90** இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். **10/2011–2012** | 346) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 29. இம்மாநகராட்சியில் எஸ்.எஸ்.பிள்ளை தெரு முதல் அழகேசபுரம் பாலம் வரையிலான பக்கிள் ஓடையின் இருபுறமும் தடுப்பு சுவர் கட்டப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தடுப்பு சுவரின் தென்பகுதியில் உள்ள காலி இடத்தில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் தடுக்கவும் நகரின் சாலை போக்குவரத்து சீரான முறையில் இயங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் மேற்கண்ட பகுதியில் தார்சாலை அமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 33.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 11/02011–2012 | 347) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 30. இம்மாநகராட்சிக்கு சொந்தமான சாமுவேல்புரம் மாநகராட்சி பள்ளியில் தற்பொழுது அதிக அளவில் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். மேற்படி பள்ளி மாணவர்களின் வசதிக்காக மேற்கு பகுதியில் கட்டிடத்தின் முதல் மாடியில் புதிதாக பள்ளி கட்டிடம் கட்டிட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 32.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>ம.ப.எண். **14/2011–2012** | 348) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 31. இம்மாநகராட்சி பகுதியில் தற்போது பக்கிள் ஓடை பராமரிப்பு பணிகள் மற்றும் தடுப்பு சுவர் அமைக்கும் பணிகள் இரண்டு கட்டமாக நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் கருத்தபாலம் (ஆண்டாள் தெரு) முதல் அழகேசபுரம் பாலம் வரையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பு சுவரின் தென்புறம் உள்ள இடங்ளில் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் தடுக்கவும் புதிய பேருந்து நிலையம் முதல் | 349) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

நகரின் கீழ் பகுதி அழகேசபுரம் வரை செல்லும் பகுதிகளுக்கு அணுகுசாலை அமைத்து சாலை போக்குவரத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 39.90 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு. –** மாமன்றம் அனுமதிக்கலாம்

ம.ப.எண். **07/2011–2012**

---

32. இம்மாநகராட்சி எல்கைக்கு உட்பட்ட 50வது வார்டு கணேஷ் நகர் பிரதான சாலை மற்றும் 5வது வார்டு ஸ்டேட்பாங்க் காலனி ஆகிய பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை மின் வாரியத்தின் மூலம் மாற்றி அமைக்கவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு. –** அனுமதிக்கலாம்

இ1//2332/2011

350) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

---

33. தூத்துக்குடி மாநகராட்சிபொன்விழா நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2010–2011ஆம் ஆண்டு (Step up Training) சுய தொழில் பயிற்சி அலகீடுக்கு ரூ. 867835/–ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி திருத்திய வழிகாட்டு நெறிமுறையின் படி (Guide line) ஒரு பயனாளிக்கு ரூ 10000/– தொழிற் திறன் பயிற்சிக்கு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டது. அதன்படி 86 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கலாம். சுயதொழில் பயிற்சிக்கு 1 ) பேஷன் டிசைனிங் பயிற்சி 2) கணிணி பயிற்சி 3) சமையல் கலை பயிற்சி ஆகிய சுயதொழில் பயிற்சி வழங்குவது தொடர்பாக கீழே கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தகுதியான நிறுவனங்களை தேர்வு செய்வது தொடர்பாக கீழே கண்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

351) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**பேஷன் டிசைனிங் பயிற்சி**

| | | | | |
|---|---|---|---|---|
| அ | 1 | Tailoring Fashion Designing | சகீனா பேஷன் டிசைனிங் பயிற்சி | ரூ.9000/– |
| | 2 | Tailoring Fashion Technology | குளோபல் அகடாமி டெய்லரிங் பயிற்சி | ரூ.9950/– |
| | 3 | Fashion Designing | சார்லி எசிகேஷன் சொசைட்டி | ரூ.10000/– |
| **கணிணிபயிற்சி** | | | | |
| ஆ | 1 | Basic Course in Computer Science | ஸ்ரீபாகம்பிரியாள் கணிணி பயிற்சி | ரூ.9925/– |
| | 2 | Computer Hardware Networking | C.M.T.E.S. கணிணி பயிற்சி | ரூ.18000/– |
| | 3 | Computer Hardware software mobile phone | CSC கணிணி பயிற்சி | ரூ.8800/– |
| **சமையல் கலை பயிற்சி** | | | | |
| இ | 1 | Catering Technology | V VJ Management | ரூ.9950/– |

**அலுவலகக் குறிப்பு**

மேலே கண்டுள்ளபடி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள அ(1) ஆ(3) இ(1) கம்பெனிகளின்படி ஏற்கலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி உத்திரவு

| | | |
|---|---|---|
| | Step-up Training அலகிற்கு ஒதுக்கீடு செய்த ரூ **867835**/–ஆகும். இதில் ஒரு பயனாளிக்கு ரூ **10000**/– வீதம் **86** பயனாளிகளுக்கு சுயதொழில் பயிற்சி வழங்கலாம்.<br><br>எப்6/00927/2011 | |
| | 34. தூத்துக்குடி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களின் ந.க.எண். 1382/அ1/நாள்8–2–11ன் படி நகர்புறங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு வாழ்வாதாரம் அமைத்துக்கொடுக்கும் நல்லெண்ணத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் ரூ 3000/– ஊதியத்தில் இந்துஸ்தான் யுனிலிவர் லிமிடெட் சார்பில் இலவசமாக காபி, டீ, விற்பனை மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி கீழ்க்கண்ட இடத்தில் மாற்றுத்திறனாளிக்கு போக்குவரத்து சுற்றுசூழல் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் மேற்படி விற்பனை மையம் அமைத்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை ந.க.எண். 1382/அ1/10 நாள் 10–11–2010ன் படி உத்திரவிட்டுள்ளார். அதன்படி இடம் ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் அனுமதி பெற்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>வ.எண்.</u> <u>மாற்றுத்திறனாளியின் பெயர், முகவரி</u>** — **<u>அனுமதிக்கும் இடம்</u>**<br><br>1) திரு. பொன்ராஜ் டிட்டோ 111/11S/3 ஸ்டேட் பேங்க் காலனி தூத்துக்குடி. — தென்பாகம் காவல் நிலையம் அருகில் கிழக்கு பக்கம் திருச்செந்தூர் ரோட்டில் ( 6 X 6)<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மேற்கண்ட மாற்றுத் திறனாளிக்கு தென்பாகம் காவல் நிலையம் கிழக்கு பக்கம் காபி, டீ விற்பனை மையம் போக்குவரத்து மற்றும் பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல் அமைத்துக்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மாற்றுத் திறனாளியின் நலன் கருதி இடம் ஒதுக்கீடு செய்யவும் அதற்கான வாடகை நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/1480/2010 | 352) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 35. இம்மாநகராட்சி வி.வி.இ. ரோடு வணிக வளாக கடை எண். 492 A அலுவலக கேட்பு பதிவேட்டின்படி திரு T.பிச்சையா என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி கடையின் பின்புறம் மேற்குப் பார்க்க சந்தை ரோடு தெருவை பார்க்க உள்ள டீ கடையை திரு.எம். சந்தணராஜ் என்பவருக்கு ரூ. **20**/– மதிப்பிலான பத்திரத்தில் திரு T. பிச்சையா என்பவர் உரிமம் எழுதி கொடுத்துள்ளார். அதன் பேரில் திரு. சந்தணராஜ் என்பவர் தனது பெயரில் பெயர் மாற்றம் செய்யக்கோரி அதற்கான வைப்புத் தொகை மற்றும் பெயர் மாற்றக் கட்டணம் செலுத்தியுள்ளார். அதன்படி இம்மாமன்ற தீர்மான எண். **81** நாள் **19–4–2010**ல் பெயர் மாற்றம் செய்ய மன்ற அனுமதி வழங்கியுள்ளது. இதில் கதவு எண். **492** A என்பதற்கு பதிலாக **493** என தவறுதலாக மன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே கதவு எண். தவறுதலாக பரிந்துரை செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட இம்மாமன்ற தீர்மான எண். **81** நாள் **19–4–2010**ஐ ரத்து செய்யவும், வி.இ. ரோடு வணிக வளாக கடை எண். **492** A–ஐ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகும் துறை அரசாணை எண். **92** நாள் **3–7–2002**ன் படி திரு. T. பிச்சையா பெயரிலிருந்து திரு.M. சந்தணராஜ் பெயரில் பெயர் மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>**1)** கதவு எண். **492**A என்பதற்கு பதிலாக **493** என தவறுதலாக பரிந்துரை செய்யப்பட்டு பெயர் மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கப்பட்ட இம்மாமன்ற தீர்மான எண். **81** நாள் **19–4–2010**ஐ ரத்து செய்யலாம். | 353) இப்பொருள் ரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 2) அரசாணை எண். 92 நாள் 3–7–2007ன் படி வி.இ. ரோடு வணிக வளாக கடை எண். 492 A ஐ திரு. T. பிச்சையா பெயரிலிருந்து திரு.M. சந்தணராஜ் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/2404/2007 | |
| | 36. தூத்துக்குடி மாநகராட்சி திருச்செந்தூர் ரோடு, வார்டு 2 பிளாக் 30 நகரளவு எண். 3441/1 மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆத்தூர் ரோடாகும். மேற்படி இடம் அரசு மருத்துவ மனைக்கு கீழ்பக்கம் புதிய நீதிபதிகள் குடியிருப்புக்கு தென்பக்கம் அமைந்துள்ளது. மேற்படி இடத்தினை தனி நபர்களால் இரண்டு முறை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. இரண்டு முறையும் மாநகராட்சியின் மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. எனவே மேற்படி இடத்தில் மேலும் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கும் மாநகராட்சியின் வருமானத்தினை உயர்த்துவதற்கும் மாநகராட்சியின் மூலம் கடைகள் கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**– அனுமதிக்கலாம்.<br><br>எப்1. 17029/07 | 354) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் 23–05–2011

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி